திட்டத்தைச் செயல்படுத்த இருந்தோம். பருவமழை பொய்த்து விட்டது. தண்ணீர் இல்லை. ஆகவே போன ஆண்டு அது கைவிடப்பட்டு, இந்த ஆண்டு நவம்பர், டிசம்பரில் அந்தப் பயிற்சித் திட்டத்தை துவக்கலாம் என்று நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : எத்தனை அரிசனங்களுக்கு, எத்தனை மாதங்களுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்படும்? அது திருநெல்வேலி மாவட்டத்திற்கு மட்டும் தானா? அதில் சேர இதர மாவட்டத்து அரிசன விவசாயிகள் விருப்பம் தெரிவித்தால் அவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : இது பரிட்சார்த்தமாக முதன் முதலாக திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டியில் நடத்த இருக்கிறோம். இது நல்ல பயன் அளித்தால் இதனையே மற்ற பகுதிகளுக்கும், இதனை நாடுதழுவிய திட்டமாக அமைக்க லாம் என்பது அரசாங்கத்தின் கருத்து. இந்தப் பயிற்சி 6 வாரத் திற்கு, 40 பேர்களுக்குக் கொடுக்க இருக்கிறோம். ஒருவருக்கு ஒரு நாளைக்கு 6 ரூபாய், சாப்பாடு, போக்குவரத்துச் செலவுக் காகவும் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

திரு. எஸ். வடிவேல் : எந்த எந்த வகையில் பயிற்சி அளிக்கப் படுகிறது? மேலத் தஞ்சையில் புஞ்சை நிலம் இருக்கிறது. அங்குள்ள அரிசன விவசாயிகளுக்கும் இந்தப் பயிற்சி அளிக்கப் படுமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : கோவில்பட்டியில் நமக்குக் கிடைக்கிற அனுபவத்தைக்கொண்டு, அதன் பலாபலன் களைப் பார்த்து பிற இடங்களுக்கும் விஸ்தரிக்கலாம்.

திரு. எம். சுரேந்திரன் : ஆறு நாளைக்குப் பயிற்சி என்றால் இந்த ஆறு நாளைக்குள் என்ன கொடுக்க முடியும்? புஞ்சை நில சாகுபடி மேம்பாட்டுப் பயிற்சி ஆறு நாளில் நடத்த, என்ன என்ன பயிற்சி கொடுக்க இருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : இது ஒரு பரிட்சார்த்தத் திட்டம், இந்த ஆறு நாள் பயிற்சித் திட்டத்தை நடத்திய பிறகு தான் இதில் உள்ள சிரமங்கள் அல்லது பலன்கள் தெரியவரும். அதற்குப்பின் இதைத் தகுந்த முறையில் மாற்றி அமைத்துக்

கொள்ளவும் நமக்கு வாய்ப்பு இருக்கிறது. இன்னும் இந்தப் பயிற்சித் திட்டத்தை நாம் செயல்படுத்தவே இல்லை. இந்த ஆண்டு நவம்பர், டிசம்பரில் நடத்தலாம் என்று இருக்கிறோம்.

கோதைமங்கலம் கிராம அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.

*** 165 வினா—புலவர் சி. பழனிச்சாமி :** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பழனிக்கருகில் உள்ள கோதை மங்கலம் கிராம அரிசன மக்கள் வீட்டுமனைகள் கேட்டு அண்மையில் விண்ணப்பித்துள்ளனரா ?

(இ) ஆமெனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : (அ) ஆம்.

(இ) மதுரை மாவட்டத்தில் உள்ள பழனி வட்டத்தைச் சேர்ந்த கோதைமங்கலம் கிராமத்தில் 21 வீடில்லாத ஏழை அரிசனங்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கு 1.22 ஏக்கர் நிலத்தை மந்தை புறம்போக்கிலிருந்து நத்தமாக மாற்றியபின், அரிசனங் களுக்கு வீட்டுமனை பட்டா கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துவருவதாக மாவட்ட ஆட்சியர் கூறியுள்ளார்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்தக் கோதைமங்கலம் கிராமத்திலிருக்கிற அரிசன மக்களிடத்திலிருந்து அரசுக்கு எப்பொழுது ரெப்ரசன்டேஷன் வந்தது ? எப்பொழுது இந்த மந்தைப் புறம்போக்கு நத்தைப் புறம்போக்காக மாற்றப் படும் ? அவைகளைத் துரிதமாகச் செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : 1973-74-ம் ஆண்டு அவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவருடைய குறிப்புப்படி இப்பொழுது எடுத்துக் கொடுத்து விடுவார்கள் என்று தெரிகிறது, கொடுத்து விடுவார்கள் என்றும் நம்புகிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, அரிசனங் களுக்கு வீட்டு மனையைக் கையகப்படுத்துவதற்காகத் தற்பொழுது பின்பற்றப்படும் விதிமுறையினால் நீண்டகாலம் தாமதம் ஆகிறது. அந்தக் காலதாமதத்தைத் தவிர்க்க அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறதா என்பதை அறியவிரும்புகிறேன்.